Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா; 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 வைகாசி 01 (15.05.1991) புதன்கிழமை ஓசை: 86

## பல்கலை. பொருள்கள் லண்டனில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்து மருத்துவ பீடத்திற்கு என நன்கொடையாக வழங்கப்பட்ட நான்கு கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் தொடர்ந்து இங்கிலாந்தில் தேங்கிக் கிடப்பதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூறியுள்ளார். இவை லண்டன் ஓவர் சீஸ் டெவலப்மென்ற் ஏஜன்ஸீஸ்' எனும் நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

◎ 50 இராணுவம் பலி ◎ கவச வாகனங்கள் சேதம் ◎ 20 புலிகள் வீரமரணம்

# ஓமந்தை சுற்றுப்புறத்திலிருந்து இராணுவம் விரட்டியடிப்பு!

ஓமந்தையைச் சூழவுள்ள பிரதேசங்களில் தரித்துநின்ற இராணுவத்தினரை இருநாள் தாக்குதலில் பேயாடிக் கூழாங்குளத்திற்கு விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்.

இம் மோதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு கவச வாகனங்கள் பலத்த சேதமடைந்தன.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருபது புலிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த இரண்டாம் திகதி விமானப்படையின் உதவியுடன் பாரிய தாக்குதல் ஒன்றை வவுனியாவின் வடபாகத்தில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டது. பல இழப்புக்களின் பின் வடக்கு நோக்கி சுமார் பத்து மைல் வரை முன்னேறிய சிறிலங்கா இராணுவம் றம்பைக்குளம், கோழியாகுளம், பூவரசங்குளம், மாதர் பணிக்கர்குளம் ஆகிய இடங்களில் தரித்து நின்றனர். இந்த இராணுவ அணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் இருந்தனர்.

மேற் குறிப்பிட்ட இடங்களில் தரித்து நின்ற இராணுவத்தினர்மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை விடுதலைப் புலிகள் பலமான தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இருபது புலிகள் வீரமரணம்

(வவுனியா)

கடந்த பன்னிரெண்டாம் திகதி கோழியாகுளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம் றம்பைக்குளம், பூவரசங்குளம் ஆகிய இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் இருபது புலிகள் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த புலிகளின் விபரம் வருமாறு:

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இரு இராணுவம் பலி

(கொழும்பு)

நேற்று மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

## பெருமைப்படக்கூடியதாக வாழ்ந்த கரும்புலிகள் -மூர்த்தி

''கரும்புலிகளாகியுள்ளோர் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்கள் மரணத்தைத் தழுவிடவில்லை. தமிழீழ மக்கள் பெருமைப்படக்கூடிய வகையில் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர் திரு. மூர்த்தி குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கடற் கரும்புலிகள் எழுச்சிநாள் கூட்டத்தில் பேசிய அவர் மேலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவாக மாபெரும் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மூன்று மாபெரும் கூட்டங்கள் நேற்று நடைபெற்றன. வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற கடற் கரும்புலித் தாக்குதலில் வீர மரணமடைந்த இரு போராளிகளுக்கும் இந்த அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன.

வீதிகள் எங்கும் எழுச்சி பொங்கும் வகையில் தோரணங்களும் வர்ணக் கொடிகளும் பறந்து கொண்டிருக்க காணப்பட்டன. சந்திகள் தோறும் எழுச்சிக் கீதங்கள் ஒலித்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை ஆரம்பம்

(மணிலா)

மடு திருப்பதி வீதியில் பிராங்கு வைத்தியர்கள் மீது நடத்திய தாக்குதல் பற்றி விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு இன்னும் பத்து நாட்களுக்குள் தமது அறிக்கையை தயாரித்து முடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் குழு தாக்குதல் நடந்த இடத்திற்கு சென்று நேற்று பொது மக்களிடம் விசாரித்து வருவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

### மாகாணசபையின் கீழ் உள்ள

## அரச திணைக்களங்களின் கட்டு நிதிகள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள வடகிழக்கு மாகாணசபையின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச திணைக்களங்களுக்குரிய இவ்வாண்டுக்கான கட்டுநிதி வழங்கப்படுவது தாமதமாகி வருகின்றது.

இவ்வாண்டு தை மாதம் முதல் இத்திணைக்களங்களுக்கான கட்டுநிதி வழங்கப்படவில்லை. அத்துடன் சில திணைக்களங்களுக்குரிய ஒரு பகுதி கட்டுநிதிக்குரிய காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டாலும் கூட அத்திணைக்களங்களுக்கு சென்றடைவதற்கு முன்னர் அக்காசோலையின் கால எல்லை காலாவதியாகி விடுகின்றது. இதனால் மேற்படி திணைக்களங்களின் செயற்பாடுகள் தாமதமடைந்து வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக யாழ். செயலக அதிகாரிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட

## அரச திணைக்களங்களின் பணத் தேவை மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றிற்குரிய பணத்தின் தேவை பற்றி மீளாய்வு செய்யப்படவுள்ளது.

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியிலும் இவ்வாண்டிலும் யாழ். மாவட்டத்தில் விலைவாசி உயர்வு மற்றும் வேறு சில காரணிகளாலும் இம் மாவட்டத்தில் உள்ள மேற்படி அரச அலுவலகங்களின் நிதித் தேவை வழமையான அளவை விட அதிகரித்துள்ளதுடன் நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தின் அனைத்து அரச அலுவலகங்களுக்குமான நிதித்தேவை உயர்ந்திருப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் மாத இறுதிக்குள் போர் நிறுத்தம் வரலாம்

### - இந்திய வானொலி ஆருடம்

(புதுடில்லி)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் போர் இந்த மாத இறுதிக்குள் ஏற்படும் போர் நிறுத்தத்தின் மூலம் நிறுத்தி வைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

நேற்று நண்பகல் இச் செய்தியை வெளியிட்ட இந்திய வானொலி தனது கொழும்பு செய்தியாளரை மேற்கோள் காட்டி இது தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழீழ விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக ஆரம்பநடவடிக்கைகள் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நடைபெறுவதாகவும் கூறியது.

அத்துடன் பேச்சுவார்த்தைகளில் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரடிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டுமென்ற நிபந்தனையையும் பிரேமதாசா மாற்றிக்கொண்டிருப்பதாகவும் கூறியது.

## 28 வருடங்களின் பின் ஜப்பானில் ரயில் விபத்து

(டோக்கியோ)

ஜப்பானில் இருபத்தெட்டு வருடங்களின் பின் இடம்பெற்ற புகையிரத வண்டி விபத்தில் முப்பத்தெட்டு பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒக்சோ எனும் நகரில் பயணிகள் புகையிரதங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த பரிதாப மரணம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் ஆறு பேர் வரையில் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**விளம்பரம்**

## விற்பனைக்கு

பயிர்களுக்குணட்டம் அளிக்கும் அடிக்கட்டு உரமாகவும் பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும், பூச்சி பீடை கொல்லியுமான நீமியா உரம் மீண்டும் விற்பனைக்கு. கிலோ ஒன்று ரூ 10 00 மட்டுமே, இணுவில், திருநெல்வேலி பூநகர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் இடைக்கும் மிகக்கைற் யாழ்ப்பாணம். (B/2486)


## பங்களாதேஷிற்கு இந்தியா அரிசி உதவி

(டில்லி)

சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பங்களாதேஷிற்கு இந்தியா 10000 தொன் அரிசியை அனுப்பிவைத்துள்ளது இதில் 5000 தொன் அரிசி உடனடியாக தரை மார்க்கமாக லொறிகளில் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

## கூ. சங்கத்தில் திருட்டு

(சங்கானை)

தொட்டிலடி கிளை இலக்கம் 33 பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன் தினம் இரவு ஒடு பிரித்து அங்கிருந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளது அங்கிருந்த பொருள்களில் சீனி, மா மற்றும் அரிசி மூடைகளும் களவாடப்பட்டுள்ளது.

## நாடக அரங்கு

(யாழ் பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடர் - 3 இன் நிகழ்ச்சிகள் நல்லூரில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணியளவில் நடைபெறவுள்ளது.

தலைமையுரையை கலைப் பேரரசு ஏ ரி. பொன்னுத்துரை அவர்களும் தொடக்கவுரையை கலாநிதி இ. பாலசுந்தரம். அவர்களு நிகழ்த்தவுள்ளனர். யாழ்ப்பாணப்பாரம்பரிய இசை நாடக மூலவணிக் கலைஞர்களான வி. வி. செல்வராஜ் எம். கனகரத்தினம், வி செல்வரட்ணம் ஆகியோர்கள் புகழ்பெற்ற நாடகங்களிலிருந்து முக்கிய பகுதிகளை காட்சியும் கானமுமாக மேடை ஏற்றவுள்ளனர்.

## பத்திரிகையாளர் பாதுகாப்பு கோருகின்றனர்

(சென்னை)

தமிழ் நாட்டு தேர்தலில் பத்திரிகையாளருக்கு பாதுகாப்பு வேண்டும் என்று தமிழ் நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவர் தமிழ் நாடு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.


# அருச்சுனா

## புகைப்படப் பொருள்கள் விற்பனை நிலையம்

ஆரம்பம் 15-05-1991 காலை 8.30 மணி

திங்கள் முதல் சனிவரை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை திறந்திருக்கும்.

கறுப்பு, வெள்ளை கலர்ப்படச் சுருள்கள், பேப்பர்கள் மலிவான விலையில் கிடைக்கும். கலர்ப்படச் சுருள்கள் டெவலப்பிங் (நெகடிவ், பொசிடிவ் இரண்டும்) செய்துதரப்படும். படங்கள் பிறேம் போட்டுக் கொடுக்கப்படும்.

அருச்சுனா
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-2519)



## விலங்கியல்

AIL 91, 92, 93

சனி - ஞாயிறு

★ விலங்கியற் பாடவிதான ஆலோசகரும் புத்தக எழுத்தாளரும், ஓய்வுபெற்ற கொத்தணி அதிபருமான

## திரு. K. சிவபாதம்

★ யாழ். நகரில் மீண்டும் மகத்தான ஆசிரியரின் கற்பித்தல்

ஆரம்பம்: 01.06.91

# BOND கல்வி நிறுவனம்

58A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-2508)


## ஓராண்டு நினைவு வீர அஞ்சலி



## வில்வரட்ணம் ஜெயரட்ணம்

(வீரவேங்கை நிசாந்தன்) (குடல்)

வீரஜனனம் 02.03.1967

வீரமரணம் 26 05.1990

திதி: 15 . 5 . 1991

நீதி சமத்துவம் வேண்டி — ஈழ மண்ணில் நடக்கும் அனர்த்தம் கண்டு விழித்தெழுந்த மறப்புலியே நிசாந்தா— உன் உயிர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் - உன் புகழ் உடல் இந்த ஈழ மண்ணிற்கே உரமாகும்.

செ. வில்வரட்ணம்
சுதிரிப்பாய்,
அச்சுவேலி

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(R-1391)

## நினைவு கூருகின்றோம்

## 1991 - 05 - 15



கப்டன் பிரின்ஸ்
(ஏகாம்பரம் யோகலிங்கம்
முதலைக்குடா.
கொக்கட்டிச்சோலை)



லெப் கேணல்
நவம்/டடி
(செல்லப்பெருமாள்
அருமைராசா -
கொக்குத்தொடுவாய்)

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா கடற்படையினரால் குமுதினிப் படகினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட

குழந்தைகள், பொதுமக்கள்

1986 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

★ குட்டிமணி (தம்பலகாமம்)

1987 ஆம் ஆண்டு தியாவெட்டவானில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட

டெனி (விஜயபாலா ரவிச்சந்திரன் - தியாவெட்டவான்)

இதே ஆண்டு நிந்தவூரில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

சரத் (மார்க்கண்டு கண்ணதாசன் - காரைதீவு)

1988 ஆம் ஆண்டு பாண்டிருப்பில் இந்தியப் படையினருடனான மோதலில வீரமரணமடைந்த

கப்டன் பிரின்ஸ் (ஏகாம்பரம் யோகலிங்கம் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை)

இதே ஆண்டு சிறாட்டிகுளத்தில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

கர்ணன் (சுப்பிரமணியம் ஆனந்தநாதன் - பூநகரி)

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான மோதலில காயமடைந்து தமிழகத்தில் வீரமரணமடைந்த

லெப். கேணல் நவம்/டடி
(செல்லப்பெருமாள் அருமைராசா - கொக்குத்தொடுவாய்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து பணியாற்றியவராவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2514)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

தீவக பாடசாலை மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள். (8-00 — 11-00)

## ஆண்டு 11, 10, 9

ஆரம்பம்: 17-05 1991

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

விஞ்ஞானம் - திரு.J R. சூரி
கணிதம் - திரு. ஜெகன்
ஆங்கிலம் - திரு.விஸ்வநாதன்
தமிழ் - திரு.சிவம் திருப்பதி
சமயம் - திரு. சங்கர்
வர்த்தகம், சமூகக்கல்வி - திரு. கோபி கருணாகரன்

முழு கடமை, கட்டு பாட்டுடன் நடாத்தப்படும்.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(B-2511)

❋ சிந்தனைக்கு ❋

இன்றியமையாத தேவையன வலிமையை
எதிர்த்து நிற்க எவராலும் முடியாது.

— ஈஸ்கிலஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 15.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# அமெரிக்க முயற்சிக்கு இஸ்ரேல் முட்டுக்கட்டை

வளைகுடாப் போரின் பின், மேற்காசியாவில் உள்ள கொந்தளிப்பு நிலையை தணித்து ஒரு சமாதான தீர்வு ஏற்படுத்தி அதன் மூலம் மத்திய கிழக்கில் தனது நிலையை உறுதிப்படுத்த அமெரிக்கா தீவிர கவனம் எடுத்து வருவதாகத் தெரிகின்றது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேமஸ் பேக்கர் பல மத்திய கிழக்கு, வளைகுடா நாடுகளுக்கு பல தடவை விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

அவரின் தொடர்ச்சியான முயற்சியின் பயனாக வளைகுடா நாடுகள் (ஈராக், ஈரான் தவிர) மேற்காசிய சமாதான மகாநாட்டில் பங்கு கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன முன்னர் மேற்காசிய பிரச்சினையில் தான் தலையிடப் போவதில்லை என அறிவித்திருந்த சவூதி அரேபியாவும் தான் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளது.

ஆனால், இப்பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப் பட்டுள்ள இஸ்ரேலும், சிரியாவும் பேச்சுவார்த்தைக்கு சில நிபந்தனைகளை விதித்துள்ள அதேவேளை அவை விட்டுக் கொடுப்பிற்கும் தயாராய் இல்லை.

சிரியா ஐ நா. சபையின் மேற்பார்வையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனத் தெரிவிக்கின்றது. சிரியாவின் இக்கோரிக்கை அமெரிக்காவினால் புறக்கணிக்க முடியாதவொரு கோரிக்கையாகவுள்ளது.

ஆனால், இஸ்ரேலோ அமெரிக்கா, சோவியத்யூனியன் மேற்பார்வையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டாலும் அவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக் கூடாது என்றும், அரபு நாடுகளுடன் நேரடியாகப் பேச தான் தயார எனவும் அறிவித்துள்ளது. மேலும், இப்பேச்சு வார்த்தையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் கலந்து கொள்ளக்கூடாது எனவும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களை விட்டுக் கொடுக்கப் போவதில்லை எனவும் நிபந்தனை விதித்துள்ளது. நிபந்தனைகளை உறுதிப் படுத்துமாப் போல் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதிகளில் யூதக் குடியேற்றங்களையும் நிறுவி வருகின்றது.

இஸ்ரேலின்இப்பிடிவாதம், இன்று அமெரிக்காவிற்குக் கூடச் சற்று எரிச்சலை ஊட்டியுள்ளது போல் தெரிகின்றது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இஸ்ரேலின் இப்போக்கை வெளிப்படையாகவே கண்டித் துள்ளதில் இருந்து இது தெரிய வருகின்றது.

உலகில் ஒரு புதிய அரசியல் ஒழுங்கை தனது தலைமையின் கீழ் உருவாக்க அமெரிக்கா முற்பட்டிருக் கையில் இஸ்ரேலின் இப்பிடிவாதம் அமெரிக்காவைப் பொறுத்து சற்றுச் சங்கடமானதே.

கெடுபிடிப் போர் நிலவிய காலத்தில் பிராந்திய வலுச் சமநிலையைப் பேணுவதற்கு கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்டஇரு வல்லரசுகளும் முற்பட்டன. ஆனால் இன்று அமெரிக்கா உருவாக்கத் திட்டமிட்டுள்ள புதிய அரசியல் ஒழுங்கில் பிராந்திய வலுச் சமநிலையைப் பேணுவதன் முழுப் பொறுப்பையும் அமெரிக்கா தானே ஏற்க முற்படுகின்றது. இந்நிலையில மேற்காசியாவில் இஸ்ரேலின் பலம் வலுச் சமநிலையைப் பாதிப்பதோடு, அமெரிக்காவின் நோக்கங்களையும் பாதிப்படையச் செய்யக்கூடியதாகும்.

இந் நிலையில், மேற்காசியாவில் அரபு உலகத்தில் அமெரிக்கா பெற்றிருக்கும் அபரிமிதமான செல்வாக்கு பாதிப்படையக்கூடிய நிலையும் உருவாகும்.

ஈராக்கிற்கு எதிரான போரில் ஐ. நா வின் பாது காவலனாகவும், ஏக பிரதிநிதியாகவும் செயற்பட்ட அமெரிக்கா, ஐ. நா. பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக்கூடாது என்ற இஸ்ரேலின் கோரிக்கையை நியாயப்படுத்த முற்படுவதும் சற்றுச்சிரமமான காரியம் தான்.

இந்நிலையில், வளைகுடாப் போரினால் அரபுக்களுடன் ஏற்பட்ட நெருக்கமான உறவை வலுப்படுத்திக் கொள்ள இஸ்ரேலுடன் அமெரிக்கா சற்று கடின போக்கை கடைப் பிடித்து இஸ்ரேலை வழிக்குக் கொண்டுவருமா? அல்லது மேற்காசியாவில் வலுச்சமநிலையைக் கடைப்பிடிக்க அரபுகளுக்கு மேலதிக ஆயுதவிநியோகத்தை மேற் கொள்ளுமா? இதில் எது அமெரிக்காவிற்கு லாபகர மானதோ அதுவே அமெரிக்காவின் புதிய மத்திய கிழக்குக் கொள்கையாக அமையக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

# மண்ணின் மைந்தனாக
# மணலாற்றில் 'நவம்'

இராணுவப் பரிசோதனையொன்றின் போது கையொன்றை இழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறான் ஒரு போராளி. வருவோர் போவோரெல்லாம் அவனுக்கு ஆறுதலும் அனுதாபமும தெரிவக்கின்றனர். அது அவனுக்கு சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகிறாள் ''நீபோராடியதுபோதும் இனி உனக்கு ஒரு கை இல்லை வீட்டிலேயே இரு'' பாசத்தின் மேலீட்டால் ஐப்படியொரு கோரிக்கை விடுக்கிறாள்தாய். அதுஅவனதுமனக்கொதிப்பை அதிகரிக்கிறது. தனக்கு அனுதாபம் கூற வந்தவர்களுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் தருணம் எனத் தீர்மானிக்கிறான்.

''எனக்குஇன்னொரு கைஇருக்கு'' உறுதியுடன் தெளிவாக ஒலிக்கிறது. அவன் வார்த்தைகள் அவனுக்கு ஆறுதல் கூற முனைந்தவர்களும் தமது நிலையை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்கு கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக, வழிகாட்டியாக இருந்தாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்தபோராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறான் அவன். அவன் தான் டடி.

டடி / நவம் வன்னிக் காடுகளின் மூலை முடுக்குகளெல்லாம் இவனுக்கு அத்துபடி இக்காடுகள் பற்றிய படம் இவன் நெஞ்சில் நிறைந்திருக்கும். இவன் பிறந்தது மலைப் பிரதேசத்தில்; விடுதலைக்காக உழைத்தது -- போராடியது வன்னிக்களங்களில்; வன்னியை நேசித்த -- வன்னிக் களசதிலே காயமுற இவனது உயிர் பிரிந்தது தமிழகத்தில்

''டசிலவையும், லோறன்ஸையும் சேர்த்தால் அதுதான் நவம்'' இவனுடன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறிய வார்த்தைகள் இவை. ஒவ்வொரு போராளிக்கும் தனித்துவமான சில ஆற்றல்கள் இருக்கும். துணிச்சலுக்குப் பெயர் போனவன் பசிலன், சிறந்த மதிநுட்பத்துக்கு பெயர்போனவன் லோறன்ஸ். இருவரது தலைமைகளையும் ஒருவனிடத்தில் கண்டதால் தான் நவத்தைப் பற்றி அப் போராளி இவ்வாறு குறிப் பிட்டான்.

அதிதியாக வந்தோரால் அகதியாக ஆக்கப்பட்டது தான் மணலாற்று மக்களின் வரலாறு இன்றோ தமது சொந்த நிலத்தை தாமே பாதுகாக்கவேண்டும் என்ற உணர்வுடன் கையில் ஆயுதத்துடன், போராட்ட உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்காளிகள் நவ



மும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படும் ''ஓமர்முக்தார்'' என்று போராளிகளால்அழைக்கப்படும் இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணை விட்டு நாம் எங்கும் போவதிற்கில்லை என்ற செய்தியை சிறிலங்கா அரசுக்கு அடிக் கடி உணர்த்தினார்கள்.

''அரசன் ஒருவன் தான் கைப்பற்றும் பிரதேசங்களைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது இராணுவ முகாம்கள் அல்ல, இதைவிட அவன் தனது பிரதேசத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். காரணம் அங்குகுடியேறும் மக்கள் அங்குநிரந்தரமாகவசிக்கப் போகிறவர்களாதலால் அவர் கள் எவ்வித இடர்களையும் எதிர்கொள்ளும் அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்குத் தயாராக இருப்பர்'' இது இளவரசன் என்னும் நூலில் காணப்படும் மாகியவெல்லியின் கூற்று இதை அப் படியே நடைமுறைப்படுத்தியதால் தான் இன்று அம்பாறை என்றொரு தொகுதியே முழுச் சிங்களத் தொகுதி என்றாகி விட்டது இதையே படிப்படியாக திருமலை, மணலாறு என விஸ்தரித்தது சிறிலங்கா அரசு ஆனல் இது தமிழீழ மண் என்று எல்லை போட்டுக் காட்டியது நவத்தின் துப்பாக்கி குடியேற்றக்காரர்கள் என்பது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதுக்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டபடியால் இன்னொரு ஒதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டது.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களான எங்கும் இந்திய இராணுவ மணம் வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும் இயக்கத் தலைமையையும் பாதுகாக்க இவன் மேற் கொண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளிகளும் கண்கள் பனிக்க கதைகதையாகக் கூறுகின்றனர்:

சூழலுக்கேற்றமாதிரியும், மக்களுக்கேற்றமாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை புதிதாகப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு, சிறுவர்களுக்கு ஊட்டியது: நெருக்கடியான காலகட்டத்தில் பதட்டப்படாமல் செயற்படும் துணிவை சக போராளிகளுக்கு ஊட்டியது காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்பு வலயம் என்றே கூறலாம். அந்தளவுக்கு சிறந்த முறையில் ஒருஒழுங்கமைப்பை உருவாக்கியவன் இவன்;

ஒற்றைக் கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும் இவனால் இது முடியுமானால் என்னால்ஏன் முடியாது? என்ற தன்னம்பிக்கையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள் தான் இன்று வன்னிமண்ணைக் காத்து நிற்கின்றனர்.

கணக்கற்ற களங்களைக் கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால்ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு, போராட்ட உணர்வு எதையும் மணலாறு மண் இழந்துவிடவில்லை. அவ்வப் போது மணலாறு பிரதேசத்தில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும். ஊர்காவல்படையும் சொல்லும் செய்தி இது தான்!

லெப். கேணல் டடி - நவத்தின்
இரண்டாவது நினைவு தினத்தையொட்டி
இக்கட்டுரை வெளியாகிறது.

## பங்களாதேஷிற்கு உதவுமாறு
# சர்வதேச உலகத்திற்கு ஐ. நா. சபை அழைப்பு

(நியூயோர்க்)

பங்களாதேஷிற்கு அவசர அடிப்படையில் உதவுமாறு சர்வதேச உலகத்திற்கு ஐ. நா. பேரவை ஒருமனதாக அழைப்பு விடுத்துள்ளது.

159 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ. நா. பேரவையில் வாக்கெடுப்பு இல்லாமலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த தொண்ணூறு ஆண்டுகளில் புயலால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது பங்களாதேஷ் என்பதனால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பங்களாதேஷில் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒன்றரை லட்சம் மக்கள் பலியாகியுள்ளனர் என்றும் ஐ நா. தெரிவித்தது.

## அமெரிக்கா
# ஆயுதங்களை பயன்படுத்த தனக்குத் தானே தடை

(வாஷிங்டன்)

இரசாயன ஆயுதப்போர் முறை பற்றிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானவுடன் பதில் நடவடிக்கை தாக்குதலுக்குக் கூட இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதன் மீதான தடையை அமெரிக்கா தனக்குத் தானே விதித்துக் கொள்ளும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ்புஷ் இத்தகைய கோட்பாடு ஒன்று அமுலாக்கப்படவிருக்கும் பத்து ஆண்டுகளுக்குள் தனது இரசாயன ஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விட அமெரிக்கா உறுதி பூண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## திருவிழா

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு வதரிபீ — விநாயகர் ஆலயத்தின் கொடியேற்ற திருவிழா எதிர்வரும் 19ம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது. இம்மாதம் 27ம்திகதி தேர்த்திருவிழாவும் 28ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (63)

# தேர்தலில் தோல்வியை அடுத்து நேபாள பிரதமர் இராஜினாமா

(காட்மண்டு)

நேபாள பொதுத்தேர்தலில் பிரதமமந்திரி கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தமது தொகுதியிலேயே தோல்வியடைந்ததையடுத்து அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் நேபாளத்தில் நடந்த பொதுத்தேர்தலில் காட்மண்டு இலக்கம் 1 தொகுதியில் தோல்வியடைந்த பட்டாராய் பின்னர் தமது பதவியை இராஜினாமாச்செய்துள்ளார். "தார்மீக ரீதியாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக" அவர் தெரிவித்தார்.

இந்தத் தொகுதியில் இவருடன் போட்டியாக நின்ற நேபாளிய கம்யூனிசக் கட்சியான ஐக்கிய மார்க்சிச லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் மதன் பண்டாரியிடம் 751 வாக்குகள் வித்தியாசத்தில் பட்டாராய் தோல்வியடைந்தார்.

இதுவரை அறிவித்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நேபாளிய காங்கிரஸ் கட்சி முன்னணியில் உள்ளது. அறிவிக்கப்பட்ட 62 இடங்களில் நேபாளிய காங்கிரஸ் 32 இடங்களை வென்றிருக்கிறது. கம்யூனிசக்கட்சி 27 இடங்களையும் பெற்றுள்ளது.

## பங்களா. மீண்டும் புயல் 26 பேர் மரணம்

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று முன்தினம் மீண்டும் ஏற்பட்ட புயல் காற்று மற்றும் மழையினால் குறைந்தது 26 பேர் உயிர் இழந்துள்ளனர் என்றும் 500 பேர் வரை காயமுற்றுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வீசிய சூறாவளிக்காற்றாலும், அசுர மழையினாலும் டாக்கா மற்றும் மத்திய மாவட்டங்களில் உள்ள மக்கள் பாதிப்படைந்துள்ளனர். ஐயாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் பதின்மூன்று பேரைக் காணவில்லை என்றும் மீட்புவேலைகளில் ஈடுபட்டோர் தெரிவிக்கின்றனர்.

## பலாலியிலிருந்து ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வட்டுக்கோட்டைப், பகுதியிலும், வல்வெட்டித்துறையிலும், வீழ்ந்து வெடித்துள்ளன. இருவர் கொல்லப்பட்டதுடன் 13பேர் காயமடைந்துமுள்ளனர்

## இஸ்ரேல் அணுவாயுதம் தயாரிக்கத் தடைவரும்

மத்திய கிழக்கிற்கான ஆயுதக் கட்டுப்பாட்டு யோசனைகளை அமெரிக்கா விரைவில் வெளியிட உள்ளது என வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த யோசனையில் இஸ்ரேல் அணுவாயுதத்திற்கான எரிபொருளை உற்பத்தி செய்வதற்கு தடை விதிக்கப்படும். அத்தவேளை அரபு நாடுகள் இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதற்கும் தடை விதிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் அரபு நாடுகளும் அணு ஆயுதம் தயாரிப்பதற்கும் தடைவரும் எனவும் மத்திய கிழக்கு நாடுகள் 900 மைலுக்கு அப்பால் செல்லும் ஏவுகணைகளையும் அழிக்குமாறும் கோரப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

## நண்பகலுடன் மூடப்பட்டது

யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையம் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டது நண்பகலில் சிறிலங்கா வானொலி மூலம் யாழ். குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டிருந்த செய்தி பரவியதும் முத்திரை விற்பனையுட்பட சகல அலுவல்களும் இடைநிறுத்தப்பட்டு தபால் நிலையம் மூடப்பட்டது.

## சீனாவும் இந்தியாவும் மீண்டும் வர்த்தக உறவு

(பீக்கிங்)

சீனாவும் இந்தியாவும் வர்த்தக உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இரண்டு நாடுகளிலும் தொடர்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இருநாடுகளுக்கும் இடையில் உள்ள உறவுகள் மேம்பட்டு வரும் வேளையில் இது நடைபெறுவதாக சீனாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரி தெரிவித்தார். அத்துடன் சீனப் பிரதமர் லீ பெங் இந்த வருட இறுதிக்குள் இந்தியா வரவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

## இருபது

★ லெப் கஸ்ரோ (இராசப்பு விமலநாதன் இருதயபுரம் மூதூர்)

★ 2ஆம் லெப். அலோசியஸ் சந்தையா ரவிச்சந்திரன் நாகதாழ்வு மன்னார்)

★ 2ஆம் லெப் கீதன் (சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் செம்மலை)

★ 2 ஆம்லெப். ஜெனா (யோகநாதன் பிரான்சிஸ் பள்ளிமுனை மன்னார்)

★ 2 ஆம் லெப். மண்டேலா (தமிழ்ச்செல்வன் தமிழகன் ஆறுகால்மடம் யாழ்ப்பாணம்

★ 2 ஆம் லெப். வியாசன் (காராளசிங்கம் விக்கினேஸ்வரன் பெரிய குளம் நெடுங்கேணி)

★ 2 ஆம் லெப். ரியூட்டன் (த. கிரேசியன் நல்லூர் யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப் செட்டி (பெரியசாமி லோகேஸ்வரன் 5ஆம் கட்டை அலம்பில்)

★ 2 ஆம் லெப் றிச்சாட் (சிதம்பரம் வேல் நாகேந்திரன் இராசபுரம் மூதூர்)

★ ஈஸ்வரன் - (பெருமாள் சசிகுமார் - அடம்பன், மன்னார்)

★ சிவசங்கர் - (நேசராசா - உதயகுமார் - தம்பன்கேணி)

★ கிறேஸி (இராமகிருஷ்ணன் ஜெயராசா - நீர்வேலி யாழ் )

★ லோகு - (செல்பற்றியான் டேவிற் - அரியாலை யாழ் )

★ தேவா - ஜஸ்டின் செல்டன் - தலைமன்னார்)

★ புஷ்பராஜ் - (ஐயாத்துரை சிவதர்சன் - குஞ்சுக்குளம் மல்லாவி - முல்லைத்தீவு)

★ பீலிக்ஸ் - (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை)

★ மனோஜ் - (யாழ்ப்பாணம்)

★ வின்சன் - (இராசரத்தினம் சுதாகரன் - பரந்தன்)

★ அருள் - (பருசையா செல்வச்சந்திரன் - நாவற்குழி)

★ அன்பன்

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## உள்ளூர் உற்பத்தி வெளியீடு

மருத்துவ சுகாதாரத் தேவைகளைப்பூர்த்தி செய்யக்கூடியவகையில் உள்ளூர் மூலப் பொருள்களைப்பயன்படுத்தி சில உற்பத்திப் பொருள்களை யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றம் வெளியிடவிருக்கின்றது இவ்வைபவம் எதிர்வரும் 17 ஆம் திகதி கைதடி சித்த மருத்துவ அரங்கில் நடைபெறும்.

## கொடி தினம்

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த கொடிதின வைபவம் இன்று 15ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் சிக்கனமான முறையில் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் நடைபெறும்.

கரும்புலிகள்

வணக்கம் இருந்தன.

குறிப்பாக வல்வெட்டித்துறை, மட்டுவில், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இடம்பெறும் எழுச்சிக் கூட்டங்களுக்கு வரவேற்பு தோரணங்களும் அலங்கரிக்கப்பட்ட அரங்குகளும், எழுச்சியைத் தூண்டும் கருத்துப் படங்களும் காணப்பட்டன.

ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் சாரிசாரியாக திரண்டு சென்று பங்குபற்றினர். (க) (லோ)

பெருமை

இன்றைய போராட்ட காலகட்டத்தில் சுமார் நான்குலட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். வீட்டிற்கு ஒருவர் போராட்டத்தில் இணைந்துகொண்டால் வெற்றி வெகுவிரைவில் எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் பேசிய திரு. ஆஞ்சநேயர் தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இந்நாட்டை விட்டு வெளியேறக் கதவு திறந்துவிட்டதன் மூலம் போராட்டத்தை பலவீனப்படுத்தவும், தமிழ்மக்களை நாடற்றவர்களாக்கவும் முற்படுகின்றது இந்தத் தந்திரமான சதிக்கு தமிழ்மக்கள் பலியாகிவிடக் கூடாதெனவும் கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட

தாக பல்வேறு திணைக்களங்களின் கணக்காளர்கள் கருதுகின்றனர். இதனால் கடந்த காலங்களில் மேற்படி அரச அலுவலகங்களுக்கு ஏற்பட்ட செலவீனங்கள் பற்றி அறிவித்துக்கொண்டு வழமையைவிட மேலதிகமாக தேவைப்பட்ட நிதி பற்றி அறிக்கை தயாரிக்கப்பட்டு இம் மாவட்டத்திற்குரிய கட்டு நிதியின் அளவை அதிகரிக்கும் படி நிதி அமைச்சுக்கும். பொது நிர்வாக அமைச்சுக்கும் கோரிக்கை விடப்படவிருக்கின்றது என்று செயலகத்தின் கணக்குப் பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

மாகாண சபையின்

கருத்து வெளியிடுகையில் கட்டு நிதிமட்டுமன்றி இத் திணைக்களங்களுக்குரிய சுற்றுநிருபங்கள், கடிதங்கள் கூட காலம் தாழ்த்தியே தமக்குக் கிடைப்பதாகவும் இதனால் இத் திணைக்களங்களுக்கும் மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களுக்கும் இடையில் தொடர்புகள் பாதிக்கப்பட்டு செயற்பாடுகளும் தாமதமடைகின்றனஎன்றும்தெரிவிக்கப்பட்டது

ஓமந்தை

தல் ஒன்றைத் தொடுத்தனர். மாலை ஆறு மணிவரையும் தொடர்ந்து நடந்த சண்டையில் இராணுவத்தினர் றம்பைக்குளம், சோழியாகுளம், பூவரசங்குளம். மாதர் பணிக்கர் குளம் ஆகிய இடங்களில் இருந்து ஓமந்தைக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருபது போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இரண்டாம் நாள் சண்டை ஓமந்தையில் இடம் பெற்றது. ஓமந்தையில் நின்ற இராணுவத்தினர்மீது காலை 7-30 மணியளவில் விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் மாலை நான்கு மணி வரையும் இடம் பெற்றது. இத் தாக்குதலினால் இராணுவம் பேயாடி கூழாங்குளம் வரை விரட்டியடிக்கப்பட்டது.

இந்த இரு நாள் மோதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் இராணுவத்தினருக்குச் சொந்தமான இரு கவச வாகனங்களும் சேதமடைந்தன.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை செல்வநாயகம்

M. B. E; P. J. K.

(மலேசிய பென்ஷனர்)

மலேசியாவில் உயர்கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. சின்னத்துரை செல்வநாயகம் M. B. E; P. J. K. சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், விசாலாட்சி, அரியகுட்டியின் மைத்துனரும், காலஞ்சென்ற பத்மாவதி, புஷ்பா (ஓய்வு பெற்ற முன்னைநாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி, டாக்டர் செல்வேந்திரா (அவுஸ்திரேலியா), அரிச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், விஜயலட்சுமியின் வளர்ப்புத்தந்தையும், டாக்டர் S. S. சோமசுந்தரம், மணி (அவுஸ்திரேலியா), விமலா (அவுஸ்திரேலியா), லோககாசன் (இங்கிலாந்து). பேரின்பநாயகம் (பொலிஸ் அத்தியட்சகர், கொழும்பு), லோகேந்திரராணி, தயாநிதி, புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், விஜயஈஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), சியாமளா, முரளீதரன், அஜீத், ரொமேஷ், சாவித்திரி, மாலதி, சித்ரா, மலர்மதி, ராதிகா, சர்மிலா, கவிதா, அரவிந்தன், கார்த்திகா, விஜயந்தி, சாந்தி, அன்ரு ஆகியோரின் பாட்டனும், யாழினி, ஜனகன் ஆகியோரின் பூட்டனும், பாலசிங்கம் (சித்ராலயா உரிமையாளர்), சிறீஸ்கந்தராஜா (பதிவாளர், யாழ். மேல் நீதிமன்றம்) ஆகியோரின் அபிமானத்தந்தையுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லமான 'ஸ்ரீ சைலம்' 151, கோயில் வீதி, நல்லூரில் 15 - 05 - 91 இன்று மாலை 3-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் அக்கினியுடன் சங்கமம் ஆகும்.

தகவல்:

(R/1392) புஷ்பா செல்வநாயகம்.

### திருமதி அமராவதி சிவசம்பு

புங்குடுதீவு மடத்துவெளி 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அமராவதி சிவசம்பு அவர்கள் நேற்று 14 - 05 - 91 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு வள்ளியம்மையின் அன்பு மகளும், சின்னக்குட்டி, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் மங்கையற்கரசி, வரராசசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), மனோன்மணி, கனகாம்பிகை (கனடா), தனபாலசுந்தரம் (கனடா), திருஞானம் (பிரதேச சபை உப அலுவலகம், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசேகரம்பிள்ளை, திருநாவுக்கரசு, சண்முகநாதன் (கனடா), ஞானம்மா (ஆசிரியை, யாழ் இந்து ம. க.), ஞானவல்லி (ஆசிரியை, சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்), சந்திரகுமாரி (ஆசிரியை, உடையார்கட்டு அ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரேமராணி (கனடா), கலாராணி (ஆசிரியை, புங். கமலாம்பிகை வித்தியாலயம்), மிதிலாராணி, முரளிகரன் (புங். சமநலச் சேவை நிலையம்), அனுராகரன், கருணாகரன் (கனடா) சந்திரவதனி, தயாவதனி, லதாயினி, லஜினி, திலீபன் (கனடா), கவிதா (கனடா), உஷா, நிஷா, சுதா, சுமித்திரா (கனடா), சுஜிபன் (கனடா), தனுஜா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 - 05 - 91 இன்று புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புங்குடுதீவு - 8 தகவல்:

(R/1393) சி. திருஞானம்

ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது